## இராஜபாளையம் நகராட்சி

**04.02.2019**

**திருவள்ளுவர் ஆண்டு 2047 விளம்பிவருடம் தை மாதம் 21ம் தேதி 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் 4ம் தேதி திங்கள்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமிராஜா நினைவுக்கூட்டமண்டபத்தில் மாலை 4.00 மணிக்கு இந்நகர் மன்றத்தின் அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**

**வருகை-திரு.க.சரவணன்,பி.எஸ்.சி.,தனி அலுவலர்**

**1** ) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 6வது வார்டு பெரிய கடை வீதி பின்புறம் ஓய்யம்புளி தெருவில் சுமார் 0.80 மீட்டர் விட்டத்தில் 40" உயரத்தில் உள்ள ஈச்சி மரத்தை 2.1.2018-ல் ஏலம் விடப்பட்டதில் கீழ் கண்ட மூன்று நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டார்கள்.

இதில் அதிகமாக ஏலம் கேட்கப்பட்டவருக்கு உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/7928/2018)

| பெயர் | ஏலத்தொகை |
|---|---|
| 1) திரு. அருணாசலம் | ரூ.1200/- |
| 2) திரு. கோவிந்தன் | ரூ.1190/- |
| 3) திரு. பிரபாகரன் | ரூ.1210/- |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கூடுதலாக ஏலம் கேட்கப்பட்டுள்ள திரு.பிரபாகரன் என்பவருக்கு உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 1 அனுமதிக்கப்பட்டது**

2 ) இந்நகராட்சிக்கு சொந்தமான T.P.மில்ஸ் ரோட்டில் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமக் காலம் 31.01.2019ல் முடிவடைகிறது. 2ம் உரிமத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரவும், நாளிதழில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் செலவுத் தொகைக்கும், மன்ற அனுமதி கோரப்படுகிறது. .(652/2016/A1)

| வ.எண் | குத்தகை இடம் | ஏல டெபாசிட் தொகை | சால்வன்சி சான்று மதிப்பு | சால்வன்சிக்கு பதில் செலுத்த வேண்டிய டெபாசிட் |
|---|---|---|---|---|
| 1. | இராஜபாளையம் நகராட்சி T.P. மில்ஸ் ரோட்டில் உள்ள கட்டணக் கழிப்பறை வசூல் உரிமம் | **1,00,000/-** | **2,00,000/-** | **1,00,000/-** |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.அவசர அவசியம் கருதி தனி அலுவல மற்றும் ஆணையர் முன் அனுமதி அளித்து தொடர் நடவடிக்கை எடுத்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 2 அனுமதிக்கப்பட்டது**

3 ) இந்நகராட்சி வார்டு எண்14, புகழேந்தி சாலை, கதவு எண்.117. திரு.பி.பாலசுப்பிரமணியன், (பொதுக்குடும்ப மேனேஜர் மற்றும் கர்த்தா ஸ்தானத்தில்) என்பவர் ஸ்ரீவில்லிபுத்தூர், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டதை எதிர்த்து, OS.No.276/2018.I.A.No.987/2018, நாள்.03.12.2018ன்படி இந்நகராட்சி மீது வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கு நாள்.(06.02.2019) வாய்தா ஏற்பட்டுள்ளது. இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.காளிதாஸ்,எம்.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகி நடத்திடவும், மேலும்

இவ்வழக்கிற்கான செலவுத் தொகை ரூ.10,000/- (பத்தாயிரம்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.7725/2018/அ2)

**அலுவலகக்குறிப்பு** - அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் 3 அனுமதிக்கப்பட்டது**

4 ) இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள TCM7189 டேங்கர் லாரியின் இடது பக்கமுள்ள சேஸ்த ஒடிந்து விட்ட நிலையில் இருப்பதால், மேற்படி வாகனத்தின் இரண்டு பக்கமும் கூடுதலான பெரிய பட்டை கொடுத்து வெல்டிங் அடித்து அதற்கு தேவையான போல்ட் மற்றும் நட்டுகள் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.12,325/- (ரூபாய் பனிரெண்டாயிரத்து முன்னூற்றி இருபத்தி ஐந்து மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/6/2018)

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 4அனுமதிக்கப்பட்டது**

5 ) இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள TN67 W 6557 குடிநீர் வாகனத்தில் உள்ள டயர்கள் தேய்வடைந்துள்ளதால் நான்கு டயர்களுக்கு ரீபட்டன் பணி மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.17,200/- (பதினேழாயிரத்து இருநுறு) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/7850/2018)

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மேற்படி பணிகளை ஆணையர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 5 அனுமதிக்கப்பட்டது**

6 ) இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள TCM7189 டேங்கர் லாரியை பழுது பார்க்கும் பொருட்டு 21.1.2019-ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளியை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்‘டப்படுகிறது. (இ2/6/2019)

| | | |
|---|---|---|
| 1) | வேல்முருகன் மோட்டர் ஓர்க்ஸ் 272எ புகழேந்தி ரோடு | ரூ.12,750/- |
| 2) | ஸ்ரீராம் மோட்டர் ஓர்க்ஸ் 354, முடங்கியார் ரோடு | ரூ.12,325/- |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீராம் மோட்டர் ஓர்க்ஸ் நிறுவனத்தாரருக்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 6 அனுமதிக்கப்பட்டது**

7 ) இந்நகராட்சிக்கு சொந்தமான கடை குத்தகை இடங்களுக்கு 24.01.2019 அன்று ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில்,கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.(.652/2016/A1)

| வ. எண் | குத்தகை இன விவரம் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளவர் விவரம் | அரசாங்க மதிப்பு மாத வாடகை | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. | பழைய பேருந்து நிலை ஏ.சி.கடை எண் : 6 | எஸ்.டி.கோபி கிருஷ்ணா,33/98பி மாடசாமி கோவில் தெரு,இராஜபாளையம் | **12,000/-** | **12,000/-** |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | பழைய பேருந்து நிலை ஏ.சி.கடை எண் : 7 | பொ.நடராஜன் த/பெ.பொன்னுச்சாமி பழையபாளையம் குமரன் தெரு, இராஜபாளைம் | **12,000/-** | **12,000/-** |
| 3. | பழைய பேருந்து நிலையத்தில் சைவ உணவு விடுதிக்கு மேல் புறம் உள்ள காரை கடை | M.முகம்மது அலி, 203.பி,சம்மந்தபுரம் சீதக்காதி தெரு, இராஜபாளையம் | **8,000/-** | **8,000/-** |
| 4. | புதிய பேருந்து நிலைய கடை எண்.21 | K.வஹிதாபானு 164,பி6, சீதக்காதி தெரு, இராஜபாளையம் | **4,000/-** | **1650/-** |
| 5. | புதிய பேருந்து நிலைய கடை எண்.22 | K.வஹிதாபானு 164,பி6, சீதக்காதி தெரு, இராஜபாளையம் | **4,000/-** | **1650/-** |

இவ்விடங்களுக்கு 30.08.2017 முதல் பலமுறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர்ப்பட்டுள்ளது.

வரிசை எண் 1 முதல் 3 வரை உள்ள இளங்கள், ஒரே ஒப்பந்தபுள்ளியாக இருந்தாலும் அரசாங்க மதிப்பு தொகைக்குரிய ஒப்பந்தப்புள்ளி தொகையாக உள்ளதால், மேற்குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தில் அனுமதி கோரப்படுகிறது.

வரிசை எண் 4 மற்றும் 5க்குரிய ஒப்பந்தப்புள்ளி தொகைகள் அரசாங்க மதிப்பிற்கு குறைவாக உள்ளதால் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் 7 அனுமதிக்கப்பட்டது**

8 ) இந்நகராட்சிக்கு சொந்தமான டி.பி.மில்ஸ் ரோட்டில் உள்ள கட்டண கழிப்பறையில், கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு 25.01.2019 அன்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

யாரும் ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை.கீழ்க்கண்ட இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர். (652/2016/A1)

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளவர் விவரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|
| 1. | N.விஜயலட்சுமி, 100 அம்மன் பொட்டல் தெரு, இராஜபாளையம் | ரூ.3,25,000/- |
| 2. | ப.குருசாமி, 100 அம்மன் பொட்டல் தெரு, இராஜபாளையம் | ரூ.3,10,000/- |

மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.2,94,233/- மற்றும் கடந்த ஆண்டு குத்தகை தொகை ரூ.3,08,700/- ஆகியவற்றை விட வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள N.விஜயலட்சுமி என்பவன் ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாக ரூ.3,25,000/- என குறிப்பிட்டுள்ளதால் அன்னாரின் ஒப்புந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு :**</u>

அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் 8 அனுமதிக்கப்பட்டது**

9 ) இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்க்கு எழுது பொருட்கள் கணினி உபயோகத்திற்க்கு டோனர் மற்றும் இதர பொருட்கள் 2018 - 2019ம் ஆண்டிற்கு கொள்முதல் செய்ய இந்நகர் மன்ற தீர்மானம் எண் 446 நாள்.28.03.18ல் 30,00,000/- முப்பது லட்சம் அனுமதி அளித்தன் பெயரில் எழுது பொருட்கள் விநியோகம் செய்ய 08.01.2019 தேதிய விலைப்புள்ளி அறிவிப்பு கோரியதில் கீழ்காணும் விவரப்படி அரசு கூட்டுறவு அச்சகத்தில் இருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது.

1)திருநெல்வேலி மாவட்ட கான்ட்ராக்ட் வேலை சேவை தொழில் கூட்டுறவு சொசைட்டி லிமிடெட் ஐ.என்.டி நம்பர் 8/2007-2008 37 சங்கரன் கோவில் ரோடு திருநெல்வேலி - ரூ.594050.

2)தி.சிதம்பரனார் லேபர் கான்ட்ராக்டர் சேவை தொழில் கூட்டுறவு சொசைட்டி லிமிடெட் ஐ.என்.டி நம்பர் டியூடிஜ 6/2006-2007 18A/23A பாளையம் கோட்டை ரோடு தூத்துக்குடி - ரூ. 586100.

3)தி மேலகரம் அச்சு வேலை தொழில் கூட்டுறவு சொசைட்டி லிமிடெட் ஐ.என்.டி நம்பர் 923 41/24A யுவராஜ் கோவில் தெரு தென்கரை - ரூ. 593875.

மேற்கண்ட அரசு கூட்டுறவு மூன்று நிறுவனத்தின் தி சிதம்பரனார் லேடர் கான்ட்ராக்டர் சேவை தொழில் கூட்டுறவு சொசைட்டி லிமிடெட் ஐ.என்.டி நம்பர் டியூடிஜ 6/2006-2007 18A/23A பாளையம் கோட்டை ரோடு தூத்துக்குடி வட்டியில் விலைப்புள்ளி தொகை குறைவாக இருந்ததால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. கோப்பு எண் : பி2/1134/2015

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2.வலச்சிராய்வின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 2ல் கண்ட நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 9 அனுமதிக்கப்பட்டது**

10 ) இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2018 -2019ம் ஆண்டிற்கான வரி மற்றும் வரியில்லா இடங்களின் வரியினை வசூல் செய்ய ஏதுவாக ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய 03.01.2019 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வரிசை எண் | நிறுவனத்தின் விபரம் | நாள் ஒன்றுக்கு ஆட்டோ வாடகை தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஜெய்ஹிந்த் ஆட்டோ 253, சிங்கராஜாக்கோட்டை இராஜபாளையம் | ரூ.2000/- |
| 2. | S.ஸ்ரீராம், எல்.70, திருவள்ளுவர் | ரூ.2100/- |

| | | |
|---|---|---|
| | நகர் இராஜபாளையம் | |
| 3. | S.தியாகராஜன் 95, மாடசாமி கோவில் தெரு, இராஜபாளையம் | ரூ.2250/- |

வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள ஜெய்ஹிந்த் ஆட்டோ உரிமையாளர் எ.எல்.ராமசுப்பிரமணியன் என்பவரின் விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளதால் அன்னாரின் விலைப்புள்ளியை அங்கிகரிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு** :

1 மன்றம் அனுமதிக்கலாம்
2 அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி அளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கிகரிக்கலாம்.
.

**தீர்மானம் எண் 10 அனுமதிக்கப்பட்டது**

11 ) இராஜபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய தென்பக்க கடை எண் 2 மற்றும் 3க்கு குத்தகை உரிமம் கோரி திருமதி.ம.செந்தாமரை என்பவர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S.277/2018ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கில் நகராட்சி சார்பாக திரு.K.காளிதாஸ், வழக்கறிஞரை ஆஜராக மன்றத்தில் அனுமதி கோரப்படுகிறது. மேலும் இவ்வழக்கிற்கு ஆகும் செலவுத் தொகைகளுக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( 7690/2018/A1)

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2 அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி அளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

**தீர்மானம் எண் 11 அனுமதிக்கப்பட்டது**

12 ) இராஜபாளையம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் ஓட்டுநராக பணிபுரிந்து காலமான திரு.இளங்கோவன் என்பவரின் வாரிசுகளுக்கிடையேயான கருத்து வேறுபாடு காரணமாக வழக்கு எண்.WP (MD)17-21-2017ன் படி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இவ்வழக்கு தொடர்பாக பார்வை 1ல் கண்டுள்ள லோக் அதலத் வழக்கு எண் MD.HC/2018ன் படி வழக்கறிஞர் திரு.அழகு சுந்தரம் என்பவ இவ்வழக்கில் ஆஜரானதற்கான தொகை ரூ.7500/- மட்டும் அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (எச்1/7928/2018)

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் 12 அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர்/தனி அலுவலர்**
**இராஜபாளையம் நகராட்சி**